# மாகாணக் கல்வித் திணைக்களம்

# வடக்கு மாகாணம்

# கர்நாடகசங்கீதம்

# தரம்-10

# பயிற்சிவினாக்கள்

1..அங்கவித்தியாசமில்லாத உருப்படி
1. கீர்த்தனை 2. புதம் 3.வர்ணம் 4. கீதம்
2. உற்றுமை சேர்வது எனும் பதிகத்தினை இயற்றியவர்
1. சுந்தரர் 2. சம்பந்தர் 3. அப்பர் 4. மணிவாசகர்
3. சபாகான உருப்படிகளில் ஒன்று
1. கீதம் 2. அலங்காரம்3. கீர்த்தனை 4. திவ்யநாமகீர்த்தனை
4. சுருதி வாத்தியங்களில் சிறந்தது
1 ஒத்து 2.சுருதிப்பெட்டி 3. தம்புரா 4. ஹார்மோனியம்
5. திருவாசகம் பாடப்படும் இராகம்
1.மத்தியமாவதி 2. மோகனம் 3. பிலஹரி 4. ஆனந்தபைரவி
6..இருகோல்கள் நாண் விற்கடம் உடுக்கை பயன்படுத்தும் இசை நிகழ்வு
1. மெல்லிசை 2. கர்நாடகஇசை 3.வில்லிசை 4.இந்துஸ்தானிஇசை
7.. நாயகன் நாயகி பாவம் கொண்ட சிருங்கார ரஸத்தை வெளிப்படுத்தும் உருப்படி
1. வர்ணம் 2 .பதம் 3. கீர்த்தனை 4. இலட்சணகீதம்
8.கண்டஜாதி அடதாளத்தின் மொத்த அட்சரம்

1. 14 2.15 3. 10 4. 12
9..ஆனந்தபைரவி இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடப்படும் உருப்படிகளில் ஒன்று
1. திருவாசகம் 2. திருத்தாண்டகம் 3.திருவிசைப்பா 4. திருப்புராணம்

10.. வீணையின் மூலாதாரம் எனப்படுவது
1. சுரைக்காய் 2. நாகபாசம் 3. தந்தித்தாங்கி4. குடம்
11.. தெலுங்குப்பதங்களின் நாயகன்
1.முருகன் 2. விநாயகர் 3. கண்ணன் 4. சிவன்
12.. வக்ர இராகத்திற்கு உதாரணம்
1. மோகனம் 2. கமாஸ் 3. பிலஹரி 4. நவரோஜ்
13.. நிஸாதாந்திய இராகத்திற்கு உதாரணம்
1. குறிஞ்சி 2. நவரோஜ் 3. மகதி 4. நாதநாமக்ரியை
14.. முத்துத்தாண்டவர் விடம் நீங்கப் பாடிய கீர்த்தனை
1. தரிசனம்செய்வேனே 2.கண்டபின்கண்குளிர்ந்தேன்
3.மாணிக்கவாசகர்பேறெனக்குத்தர4.அருமருந்தொருதனிமருந் 15. முன்னம் அவளுடைய நாமம் கேட்டாள் எனும் பதிகத்தினை பாடியவர்
1.சம்மந்தர் 2. அப்பர் 3. சுந்தரர் 4.மணிவாசகர்
16. பக்தி இசை மறுமலர்ச்சி பெற்ற காலம்1.சங்ககாலம் 2.பல்லவர்காலம்3.சங்கமருவியகாலம் 4. மூவேந்தர்காலம்
18. வீணை வாசிப்பதில் பிரபல்யமடைந்தோர்

1. நவநீதம் டி.ஆர. மகாலிங்கம் 2. தனம்மாள் சிட்டிபாபு 3.மதுரரைமணியைர் வைத்தியநாதன்
4. காரைக்குடிஅருணாசலம் ராஜரத்தினம்பிள்ளை

19. சங்ககாலத்தில் காணப்பட்ட இசை

1.பக்திஇசை2.உலகியல்இசை3.மெல்லிசை4..நாட்டுப்புறஇசை20. சுருதிக்காக தனியே தந்திகள் பொருத்தப்படாத வாத்தியம்

1. பகுத்வனிவாத்தியம் 2.ஏகத்வனிவாத்தியம் 3.நிஸ்‘களவாத்தியம் 4. சகலவாத்தியம

# பகுதி -2

## எல்லா வினாக்களுக்கும் விடை தருக?

1.. சங்கமருவிய காலப்பகுதிகளில் பெருவழக்காயிருந்த அகத்திணைமரபை தழுவி நாயன்மார் இயற்றிய பதிகங்கள் இரண்டு தருக?
2. ஜனக இராகத்தின் நான்கு இலட்சணங்களையும் எழுதுக?
3. 6 ஸ்வரங்களை எடுத்துக்கொள்ளும்˙இராக வகை ?
4. இந்தியாவின் தேசிய வாத்தியம் எது?
5. முத்துத்தாண்டவர் பிறந்த நூற்றாண்டு ?
6. முத்துத்தாண்டவர் கொள்ளிடம் பெருக்கெடுத்து ஓடிய போது பாடிய பாடல்?
7. மகேந்திரவர்மனுடைய இசைப்புலமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் கல்வெட்டு?
8. வீணை வாத்தியத்தில் சிறப்புற வாசிக்ககூடிய இசை வடிவம்?
9. தோடி இராகத்தினை 8 நாட்கள் ஆலாபனை செய்த வித்துவான்?
10.பஞ்சமாந்திய இராகத்திற்கு உதாரணம் தருக?

2. முதுதுத்தாண்டவரின் வாழ்க்கை வரலாற்றினை பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க

1. வாழ்க்கை காலம் 2. பிறந்த இடம் 3. இளமைக்காலம்
4. வாழ்க்கைச்சம்பவங்கள் 5. இவர் இயற்றிய உருப்படிகள் நான்கு 6. இவரது உருப்படிகளின் சிறப்புக்கள் இரண்டு

3.1. வீணை வாத்தியத்தின் படம் வரைந் பாகங்களைக்குறிப்பிடுக

2. இவ்வாத்தியத்தின் அமைப்பினை விளக்கி சுருதி சேர்க்கும் முறையினைக்குறிப்பிடுக.
3. இவ் வாத்தியத்தின் சிறப்புக்கள் நான்கு எழுதுக
4. இவ் வாத்தியத்தினை வாசித்து பிரபல்யம் பெற்ற வித்துவான்கள் இருவரின் பெயர்களைத் தருக

4. 1.தோடிஇராகத்தின் மேள எண்? 2. இவ் இராகத்தின் பழைய பெயர்? 3. இந்த இராகத்தின் ஆரோஹண அவரோஹணம்?
4. இந்த இராகம் அமைந்துள்ள சக்கரம்?
5. இந்த இராகத்தின் ஸ்வரஸ்தானங்களைக் குறிப்பிடுக?
6 இவ் இராகத்தில் அமைந்த உருப்படிகளில் இரண்டினைக் குறிப்பிடுக?
7. இவ் இராகத்தின் ஏனைய சிறப்பம்சங்களில் மூன்றினை குறிப்பிடுக? 8. இவ் இராகத்தின் சஞ்சாரம் எழுதுக? (

5..இந்தியாவில் 7ம் 8ம் நூற்றாண்டுகளில் இசை வளர்ச்சி பற்றி நீர் கற்ற விடயங்களைத் தொகுத்து எழுதுக

6. 1. ஜன்னிய இராகம் என்றால் என்ன ?
2. ஜன்னியஇராகப்பிரிவுகளை எழுதுக?
3. அவற்றில் நான்கினை விளக்கி உதாரணம் தருக?